UNIVERSITY OF PERADENIYA

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය) පරීක්ෂණය 200 මට්ටම - දෙසැම්බර් - 2022

இளங்கலைமாணிப் பட்ட பரீட்சை (வெளிவாரி-புதிய பாடத்திட்டம்) 200 வது தேர்ச்சி மட்டம் - டிசம்பர் 2022

Bachelor of Arts (External - New Syllabus) Examination 200 Level – December - 2022

சிற்றினப் பொருளியல் கோட்பாடு (ECNE 201 )

කාලය පැය (03) තුනයි.
மூன்று) 03) மணித்தியாலங்கள்
Time three (03) Hours.

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ.
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
Marks will be deducted for illegible hand writing.

ප්‍රශ්න ------ ට පිළිතුරු සපයන්න.
ஐந்து (05)வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க
Answer ------ questions only.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව- --------- කි
இந்த வினாப்பத்திரத்தில் ஏழு(07) வினாக்கள் உள்ளன.
There are ------- questions in the question paper.

---

**1.** i. சமப்பயன் வளையி என்பதால் கருதப்படுவது யாது? (04 புள்ளிகள்)

ii. இரு சாதாரண பண்டங்களுக்கான சமப்பயன் வளையியானது கீழ் நோக்கிய சரிவினையும் ஆரம்ப மூலத்தினை நோக்கிக் குவிந்திருப்பது ஏன்? (06 புள்ளிகள்)

iii. வரவு செலவுத்திட்ட வரையறை என்ற எண்ணக்கருவினை வரைபடத்தினைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)

iv. நுகர்வோர் சமநிலை என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது? வரிசைசார் பயன் அணுகுமுறையின் அடிப்படையில் நுகர்வோர் சமநிலைக்கான நிபந்தனைகள் யாவை? (06 புள்ளிகள்)

**2.** i. குறுங்கால உற்பத்திச் சார்புக்கும் நீண்டகால உற்பத்தி சார்புக்கும் இடையிலான வேறுபாடு யாது? (04 புள்ளிகள்)

ii. ஒரு நிறுவனத்தின் குறுங்கால உற்பத்தியின் வேறுப்பட்ட கட்டங்களை வரைபட ரீதியாக காட்டுக. ஒவ்வொரு கட்டத்தினதும் அடிப்படைப் பண்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)

iii. உற்பத்தியில் ஒரு மாறும் உள்ளீடு காணப்படும் நிலையில் மாறும் விகித விளைவு விதியினை விளக்குக. (05 புள்ளிகள்)

iv. சம உற்பத்தி கோட்டின் உடமைகள் யாவை? பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி உமது விடையினை விளக்குக (05 புள்ளிகள்)

**3.** i. மரபு ரீதியான மற்றும் நவீன செலவுக் கோட்பாடுகளுக்கிடையிலான அடிப்படை வேறுபாடு யாது? (04 புள்ளிகள்)

ii. நவீன செலவு கோட்பாட்டின் கீழ் நிறுவனங்கள் ஒதுக்கு இயலுமையுடன் கூடிய இயந்திரங்களைத் தெரிவு செய்வது ஏன்? (05 புள்ளிகள்)

iii. ஒரு நிறுவனத்தின் செலவு சார்பானது கீழ்வருமாறு தரப்பட்டுள்ளதாக கருதுக

$$TC = 6 + 3Q - 0.6Q^2 + 0.02Q^3.$$

a. சராசரி செலவு (AC) சார்பினை காண்க. (03 புள்ளிகள்)

b. எல்லை செலவு (MC) சார்பினை காண்க. (04 புள்ளிகள்)

c. ஒரு நிறுவனம் 100 அலகுகள் வெளியீட்டினை (Q) உற்பத்தி செய்யுமெனின் அதன் சாராசரி மாறும் செலவு (AVC) மற்றும் சாராசரி செலவு (AC) கள் யாவை? (04 புள்ளிகள்)

**4.** i. நிறைபோட்டிச் சந்தை ஒன்றினுடைய அடிப்படை எடுகோள்கள் யாவை? (05 புள்ளிகள்)

ii. ஒரு நிறைபோட்டிச் சந்தையில், நிறுவனமொன்று விலையை ஏற்போனாகக் கருதப்படுவது ஏன் ? (05 புள்ளிகள்)

iii. நிறைபோட்டிச் சந்தை நிலமையின் கீழ் நிறுவனமொன்றின் குறுங்கால நிரம்பல் வளையியானது எவ்வாறு பெற்றுக்கொள்ளப்படுகின்றது ? (05 புள்ளிகள்)

iv. "ஒரு நிறைபோட்டிச் சந்தையிலுள்ள அனைத்து நிறுவனங்களும் குறுங்காலத்தில் பொருளாதார இலாபத்தினை உழைக்கின்றன". இக்கூற்று தொடர்பாக கருத்துரைக்குக. (05 புள்ளிகள்)

**5.** i. தனியுரிமை சக்தியின் தோற்றப்பாட்டிற்கான காரணிகள் எவை? (03 புள்ளிகள்)

ii. தனியுரிமை நிறுவனத்தின் இயலளவு பயன்பாட்டினை நிறை போட்டி நிறுவனத்துடன் ஒப்பிடுக? (05 புள்ளிகள்)

iii "குறுங்காலத்தில் ஒரு தனியுரிமை நிறுவனம் சாதாரண மற்றும் அசாதாரண இலாபத்தினை அல்லது நட்டத்தினை உழைக்கும்" இக் கூற்றினை உம்மால் ஏற்றுக்கொள்ள முடியுமா? உமது விடையினை விளக்குக. (04 புள்ளிகள்)

iv. பின்வரும் தனியுரிமை நிறுவனத்தினுடைய கேள்வி மற்றும் செலவுச் சார்புகளைக் கவனத்திற் கொள்க

$P=130-0.5Q$ $MC = 2Q+10$

a. தனியுரிமை நிறுவனத்தின் இலாப உச்சப்படுத்தல் வெளியீட்டு மட்டம் மற்றும் விலையினைக் காண்க (04 புள்ளிகள்)

b. தனியுரிமை நிறுவனத்திற்கான இலாபத்தினைக் காண்க. (04 புள்ளிகள்)

**6.** i. ஒரு தனியுரிமைப் போட்டிச் சந்தையின் பிரதான பண்புகளை விளக்குக (04 புள்ளிகள்)

ii. உற்பத்தி பொருள் வேறுபடுத்தல் என்பதனால் கருதப்படுவது யாது? இது தனியுரிமைப் போட்டி நிறுவனத்தின், விலைகளையும் வெளியீட்டினையும் நிர்ணயிப்பதில் என்ன பங்கினை வகிக்கின்றது? (06 புள்ளிகள்)

iii. ஒரு நிறுவனத்தின் விற்பனைச் செலவினை அதன் உற்பத்திச் செலவிலிருந்து வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

iv. ஒரு நிறுவனத்தின் விளம்பரச் செலவிற்கான உத்தம மட்டத்தினை விளக்குக. (06 புள்ளிகள்)

**7.** பின்வரும் எண்ணக்கருக்களை வேறுபடுத்துக.

i. பதிலீட்டு விளைவும் வருமான விளைவும்

ii. எல்லை வருமான உற்பத்தியும் எல்லை உற்பத்தி பெறுமதியும்

iii. வருமான நுகர்வு வளையியும் மற்றும் விலை நுகர்வு வளையியும்

iv சம செலவுக் கோடும், பாதீட்டுக் கோடும்

(ஒவ்வொன்றிற்கும் தலா 05 புள்ளிகள்)